DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE CHIEF JUDICIAL MAGISTRATE, SIVAGANGAI.

Case No.	:	S.C. 48/2026
Deposition of Witness for	:	P.W. 4
Name	:	**திரு.மதிவாணன்**
Father's Name	:	**ராமதாஸ்**
Village	:	
Taluk	:	
Calling	:	**ஆய்வாளர் (ஓய்வு)**
Age	:	

(வழக்கின் எதிரி ஆஜர்.)

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1973 of the day of 24.03.2026

<u>முதல் விசாரணை:</u>

1. நான் திருநெல்வேலி விக்கிரமசிங்கபுரம் காவல்நிலையத்தில் காவல் ஆய்வளராக பணியாற்றி கட்டாய பணி ஓய்வு பெற்று தற்போது மதுரையில் குடியிருந்து வருகிறேன். நான் கடந்த 2015 ம் வருடம் திருப்பத்தூர் தாலுகா காவல்ஆய்வாளராக பணியில் இருந்தபோது 02.02.2015 ம் தேதி திருக்கோஷ்டியுர் காவல்நிலைய சிறப்பு சார்பு ஆய்வாளர் ஜெயசங்கர் என்பவர் நிலைய பொறுப்பில் இருந்தபோத நிலைய மனு எண்.246/2015 மனுவை பார்வையிட்டு அந்த மனுவில் கண்டுள்ளபடி வழக்கின் புகார்தாரர் ஏரியூர் கிராமத்தை சேர்ந்த கருப்பையா மகன் கருப்பையா என்பவர் சிவகங்கை மாவட்ட காவல் கண்காணி்ப்பாளரிடம் கொடுத்த புகார் மனுவின் அடிப்படையில் திருக்கோஷ்டியுர் காவல்நிலைய குற்ற எண்.19/2015 இதச பிரிவுகள் 294 பி, 324, 448, 427, 506(2) மற்றும் பிரிவு 3 of TNPDDL Act-ன் கீழ்

முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார். அவர் பதிவு செய்துள்ள **முதல் தகவல் அறிக்கை அ.த.சா.ஆ.2** ஆகும்.

2. பின்பு புகாரையும் முதல் தகவல் அறிக்கையும் சம்மந்தப்பட்ட நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்து வழக்கு கோப்பினை விசாரணைக்காக திருப்பத்தூர் தாலுகா காவல் பொறுப்பு ஆய்வாளருக்கு அனுப்பி வைத்துள்ளார். திருப்பத்தூர் தாலுகா காவல் ஆய்வாளர் ராஜசேகர் என்பவர் இவ்வழக்கினை மேல் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு சம்பவயிடம் சென்று மதியம் 2.00 மணியளவில் வழக்கின் சம்பவயிடத்தை சாட்சிகள் ஆதினமிளகி, மூர்த்தி ஆகியோர்கள் முன்னிலையில் பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார். **பார்வை மகஜர் அ.த.சா.ஆ.3** ஆகும். **மாதிரி வரைபடம் அ.த.சா.ஆ.4** ஆகும்.

3. பின்பு சாட்சிகள் கருப்பையா, ராக்கம்மாள், கல்யாணி, மச்சக்காளை மற்றும் பார்வை மகஜர் சாட்சிகள் ஆதினமிளகி, மூர்த்தி ஆகியோர்களை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். இவ்வழக்கில் சம்மந்தப்பட்ட எதிரியான கருப்பயா என்ற சங்கரை அதே தினமான 02.02.2015 ம் தேதி 16.00 மணியளவில் திருப்பத்தூர் பேருந்து நிலையத்தில் வைத்து கைது செய்து நிலையம் கொண்டு வந்து நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்துள்ளார். இத்துடன் வழக்கு கோப்பினை நான் திருப்பத்தூர் தாலுகா காவல்நிலைய ஆய்வாளராக பொறுப்பேற்ற பிறகு எனது விசாரணைக்கு எடுத்துக்கொண்டு சாட்சிகளை விசாரித்தபோது முந்தைய ஆய்வாளரிடம் கூறிய விபரங்களையே என்னிடம் கூறியதால் தனியாக சாட்சிகளின் வாக்குமூலம் பதிவு செய்யவில்லை.

4. சம்பவயிடம் குறித்தான பார்வைமகஜர், மாதிரி வரைபடம் சரியாக இருந்தது. இத்துடன் நான் வழக்கு விசாரணையை முடித்து 26.02.2015 ம் தேதி இதச பிரிவுகள் 294 பி, 324, 448, 427, 506(2) மற்றும் பிரிவு 3 of TNPDDL Act-ன் கீழ் எதிரி மீது குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன். எனது விசாரணையின்போதும், ஆய்வாளர் ராஜசேகர் விசாரணையின்போதும் அ.சா.1 முதல்

3 வரையானவர்கள் வழக்கு சம்பவம் குறித்து எனது விசாரணையின்போது வாக்குமூலம் அளித்துள்ளார்கள். (**இவ்வழக்கின் அ.த.சா.ஆ.2 முதல் 4 வரையானவை அசல் ஆவணங்கள் அமர்வு வழக்கு எண். 215/2024 வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.**)

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:

எதிரி மீது முதல் தகவல் அறிக்கை பொய்யாக பதிவு செய்துள்ளார் என்றால் சரியல்ல, ஆய்வாளர் சம்பவ இடம் சென்று பார்வை மகஜர், மாதிரிவரைபடம் தயார் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. சாட்சிகளை சொன்ன இடத்தில் சொன்ன நேரத்தில் விசாரணை செய்யாமல் எதிரி மீது தவறுதலாக குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. நான் சொன்னது போல் ஆய்வாளர் சொன்ன இடத்தில் சொன்ன நேரத்தில் கைப்பற்றுதல் பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் மற்றும் அத்தாட்சி தயார் செய்யவில்லை என்றால் சரியல்ல. எதிரியிடம் ஒப்புதல் வாக்குமூலம் எதுவும் பெறப்படவில்லை என்றால் சரியல்ல. அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின்படி எதிரியிடம் எந்தவித சான்றுபொருட்களும் கைப்பற்றப்படவில்லை என்றால் சரியல்ல. நான் சொன்னது போல் நீதிமன்றத்திற்கு சான்றுபொருட்களை அனுப்பவில்லை என்றால் சரியல்ல. சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில் எதிரியை கைது செய்யவில்லை என்றால் சரியல்ல. இவ்வழக்கிற்கும் எதிரிக்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. இந்த வழக்கினை சரிவர புலன் விசாரணை செய்யாமல் குற்ற இறுதி அறிக்கை பொய்யாக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

மறு விசாரணை: இல்லை

N SENTHIL MURALI

Digitally signed by N SENTHIL MURALI
Date: 2026.03.24 15:31:22 +0530

உதவி அமர்வு நீதிபதி,

தலைமைக் குற்றவியல் நடுவர் ,

சிவகங்கை.